DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 139/2024 |
| P.W. | : 3 |
| Name | : திரு. பழனிச்சாமி |
| Father Name | : திரு. கருப்பணகவுண்டர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2026

எதிரி காணொளி காட்சி மூலமாக ஆஜர் படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :-**

நான் கொண்டப்பநாய்க்கன்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். ராஜசேகரனின் வீட்டிற்கு மேபுறம் என் வீடு உள்ளது. 2006-ம் வருடம் ஒரு நாள் மாதம், தேதி சரியாக ஞாபகம் இல்லை. என் வீடு தெற்கு பார்த்துள்ளது. ராஜசேகரனின் வட புற சன்னலை திறந்து அண்ணா அண்ணா என்று சப்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அப்பொழுதுதான் வீட்டிலிருந்து

வெளியே வந்தேன். சப்தம் போட்டதால் நான் சென்று பார்த்தேன். சன்னல் அனைத்தும் உடைந்து கிடந்தது. வீட்டின் கதவு வெளியே தாழ்பாள் போடப்பட்டிருந்தது. வீட்டின் கதவை திறந்துவிட்டுவிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தேன். அதற்கு இரவு 4 அல்லது 5 நபர்கள் வந்து அவர்களை அடித்துபோட்டுவிட்டு கைகளை கட்டிவிட்டு வீட்டில் இருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு மேற்படி வீட்டில் இருந்த 4 நபர்ளையும் வீட்டில் அடைத்து வைத்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.**